RESEARCH ARTICLE

DOI: 10.54392/ijot2411

Asian Research Association

INDIAN JOURNAL OF TAMIL

# தேவார காலத் தமிழகத்தில் சமய மரபுகள்

வ. குணபாலசிங்கம் [அ, *], ர. சுரேஷ் [அ]

[அ] இந்து நாகரிகத்துறை, கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

[அ] தமிழ்த்துறை, அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, குமாரபாளையம், தமிழ்நாடு, இந்தியா.

# Religious Traditions in Tamil Nadu during the Devaram Period

**V. Gunapalasingam [a, *], R. Suresh [a]**

[a] Faculty of Arts and Culture, Eastern University, Sri Lanka
[b] Department of Tamil, Government Arts and Science College, Komarapalayam, Tamilnadu, India
*Corresponding author Email: gunapalasingamv@esn.ac.lk
DOI: https://doi.org/10.54392/ijot2411
Received: 27-08-2023; Revised: 29-11-2023; Accepted: 24-12-2023; Published: 03-01-2024

**Abstract:** Tamil devotional literature which was prevalent in Tamil Nadu during the Devar period was heavily influenced by Sanskrit literature. On this basis, it is known that many ancient historical incidents have been mentioned in the songs of Devaram. Birth of Gods, the manner in which their relationship is taught, the historical events of the gods, and their heroic deeds can be seen in the devaram. This article explains about the daughter of Umai Malaiyarasan, God Murugan Sivashakti, the story of Brahma and Vishnu searching for a foothold, the story of Vishnu's, the attributes of Shiva bearing Umadevi and Vishnu with half of his body and about the belief in the worship of natural objects such as the moon, Ganges, and Navagraha. It is worth noting that mythological information about the characteristics of minor deities, Indra, Varuna, Agni, Atatiku Balakas, etc., etc., are scattered throughout the Devaram. The purpose of this article is to explore all these in detail.

**Keywords:** Tamil devotional literature, Shivan, Devaram, Devar

## முன்னுரை

தேவார காலத் தமிழ் நாட்டில் சிறந்து விளங்கிய சமயங்களுள் சைவசமயம் பிரசித்தமானது. சிவனே முழுமுதற் கடவுள் என்று தெளிந்து, அச்சிவனுக்கு இறைமை கூறுகின்ற சமயமே சைவசமயமாகும். இச்சமயத்தில் முத்தி இன்பத்தையே தமது இறுதி இலக்காகக் கொண்டு செயலாற்றிய திருத்தொண்டர்கள் பலர். அவர்களை நாயன்மார்கள் என அழைப்பது தமிழ் நாட்டுச் சைவ மரபு. இத்தகைய நாயன்மார்கள் அறுபத்து மூவர் ஆவர். அவர்களுள் சிறப்புற்று விளங்குவோர் மூவர். அவர்கள் முறையே திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரமூர்த்தி நாயனார் என்பவராவர். இவர்கள் இறையின்பம் பொருட்டு தமிழ்நாட்டிலுள்ள திருத்தலங்கள் பலவற்றுக்கும் சென்று அங்கு கோயில் கொண்டுள்ள சிவபெருமானை வணங்கிப் போற்றினர். இவர்கள் இறைவனை வணங்கிப் போற்றிய பாடல்கள் தேவாரம் எனப்பட்டன. தேவாரம் பாடிய மூவரும் தேவார முதலிகள் என சிறப்பிக்கப்பட்டனர்.

தேவாரம் தே + வாரம் எனப் பிரியும். தே என்பது தெய்வத்தையும் வாரம் இறைவன் புகழைப்பாடுதல் எனவும் பொருள் கொள்ளப்படுகின்றது (Vellaivaranan, 1962). தேவாரம் தேவபாணி என்பதில் இருந்து பெறப்பட்டிருக்கலாம், தேவபாணி என்பது இறைவனை முன்னிலைப் படுத்திப் போற்றுவதாகும் (Vellaivaranan, 1962). பன்னிரு திருமுறைகளில் இம்மூவர் தேவாரங்களும் முதல் ஏழு திருமுறைகளில் வைப்புச் செய்யப்பட்டுள்ளன. அவை அடங்கன் முறை எனச் சிறப்பிக்கப்படுகின்றன. இவ்வடங்கன் முறையில் மொத்தம் எட்டாயிரத்து இருநூற்று ஆறு பாடல்கள் உள்ளமை குறிப்பிடத்தக்கது (Velupillai, 1999).

தமிழகத்தில் பிரசார சமயங்களான சமணம், பௌத்தம் முதலிய அவைதீக சமயங்களின் வீழ்ச்சிக்கு தேவார முதலிகளும், அவர்களது பாடல்களும் முதன்மைக் காரணமாய் அமைந்தன. கடவுள் மறுப்பு, உலகியல் வெறுப்பு, யாக்கை நிலையாமை ஆகிய அவைதீக சமயங்களின் கருத்துக்களை கண்டனத்துக்கு உள்ளாக்கி சிவனின் முழுமுதற் தன்மை, மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம் என்ற உலகியல் பற்று முதலிய கருத்துக்களை சமுதாயத்துக்கு பொருத்தமான வகையில் தேவார முதலிகள் எடுத்துச் சென்றமையின் காரணமாக தேவார காலச் சைவ நெறியில் பல புதிய செல்நெறிகள் உருவாக்கம் பெற்றன.

தேவார முதலிகள் சிவபெருமானின் பரத்துவத் தன்மையினையும் அவரது சிறப்புக்களையும் மேலோங்கச் செய்யும் பொருட்டு; ஏனைய தெய்வங்களையும், தேவர்களையும் தமது தேவாரங்களில் பாட வேண்டிய தேவை உருவாகியமை ஈண்டு நோக்கத்தக்கதாகும். இவ்வடிப்படையில் நோக்குகையில் தேவார முதலிகள் மூவரும் சிவன் அல்லாத தெய்வங்களையும், தேவர்களையும் தமது பதிகங்களில் பாடியுள்ளமை கவனத்திற் கொள்ளத்தக்கது.

## தேவார காலத் தமிழகத்திற் சைவநெறி

தமிழ் இலக்கியப் பரப்பில் அறம் சார்ந்த நூல்கள் பெருளவில் உருவாகிய காலம் சங்கமருவிய காலமாகும். இந்நூல்கள் மக்களின் மனதை வெல்லுவதையே நோக்கமாகக் கொண்டவை ஆகும். இந்நோக்கங்கள் நிறைவேற சமணரின் அறநெறிகள் தமிழ்ச்சமுதாயத்தில் வேரூன்றி விட்டன. இச்சூழலில் தோற்றம் பெற்ற பெண்ணடியாரே காரைக்கால் அம்மையார் ஆவார். இவர் தமிழகப் பக்தி இயக்க, இலக்கிய மரபுகளுக்கு வழிகாட்டியதன் பயனாகவே பல்லவர் காலம் பக்திநெறியின் வளர்ச்சிக் காலம் என ஆராய்ச்சியாளர்களால் வருணிக்கப்படுகின்றது. காரைக்கால் அம்மையின் பக்தி எழுச்சி பின்வந்த சைவ அடியார்களான நாயன்மார்களுக்கு பெரிதும் கைகொடுத்தது. காரைக்கால் அம்மையார் கொண்டிருந்த சைவ நெறி பற்றிய கருத்தியல் நாயன்மார்களால் பெரிதும் வரவேற்புக்கு உட்படுத்தப்பட்டது. இவ்வகையில் அம்மை காட்டிய வழியில் தேவார மூவரின் பயணம் தொடர்ந்தமை அக்கால சைவநெறியின் பிரதான பண்பாக விளங்கியமை ஈண்டு நோக்கத்தக்கதாகும்.

கடவுள் இல்லை என்று வாதாடிய அவைதீக சமயவாதிகளின் பரப்புரைகளுக்கு கடவுள் உண்டு என சான்று காட்டி மறுப்புத் தெரிவித்து சைவநெறியின் வளர்ச்சிப் போக்கில் தேவார மூவர் பாரிய பங்காற்றினர். அவைதீக சமயவாதிகளின் உலகியல் வெறுப்புக்கு மாற்றுக் கருத்தை வெளியிடும் வகையில் தமிழ்ச் சமுதாயத்தினருக்கு தெய்வங்களிடையேயான உறவுமுறை கற்பிதம் செய்து வைக்கப்பட்டன. சிவனைத் தந்தையாகவும், உமையைத் தாயாகவும் முருகன், கணபதி ஆகியோரை பிள்ளைகளாகவும், திருமாலை முருகன் கணபதி ஆகியோரின் மாமனாகவும் கொண்ட உறவு முறை அறிமுகம் செய்யப்பட்டன. இவ்வுறவுமுறையின் அடிப்படையில் உருவான சமயநெறியே சைவநெறியாகும்.

தேவார காலத் தமிழகத்தில் வலிமைமிக்க மன்னர்கள் பலர் சைவ மதம் சார்ந்தனர். சைவநெறிக்கு தம்மாலான பணிகளைப்புரிந்தனர். கோயில் கட்டுமானங்கள் தொடக்கம் திருமுறைப் பதிகங்கள் வரை தம் பெயரைப் பதிவாக்கிய மன்னர்கள் பலர். மகேந்திரவர்மன், சேரமான்பெருமாள் முதலிய மன்னர்கள் சைவ வழி நின்று சமுதாயப் பணிபுரிந்த மன்னர்கள் ஆவர்.

சைவ நாயன்மார்கள் வடமொழிப் புராண இதிகாசச் சம்பவங்களை தமிழிற் கொணர்ந்து சிவபெருமானின் புகழை தமிழக சைவ மரபில் கலக்கச்செய்தமை தேவாரகாலச் சைவ நெறியின் பிரதான அம்சமாகும். அத்துடன் தேவார காலச் சைவமரபின் புதியதொரு பரிமாணமாக அடியார் வழிபாட்டைக் குறிப்பிடலாம். தமிழகத்தில் வாழ்ந்து இறையின்பம் நுகர்ந்து சைவ சமுதாயத்துக்கு வழிகாட்டிய அருளார்களை வணக்கத்திற்கும், வழிபாட்டுக்கும் உரியவர்களாக்கி, அவர்கள் மீது பதிகங்கள் பாடி பிற்பட்ட கால திருத்தொண்டர் புராண வளர்ச்சிக்கு வழிகாட்டிய பெருமை சுந்தரமூர்த்தி சுவாமிகளைச்சாரும். இவ்வாறு தேவார காலச் சைவமரபு பல்பரிமாணத்தன்மை கொண்டிந்தமை கவனத்திற் கொள்ளத்தக்கது. இவ்வடிப்படையில் தேவாரங்களில் சிவன் தவிர்ந்த தெய்வங்களையும், தேவர்களையும் பாடியமை தேவாரங்களில் பிரதான அம்சங்களில் ஒன்று.

## தேவாரங்களில் சிவன் அல்லாத தெய்வங்களும் தேவர்களும்

தேவார முதலிகளால் பாடப்பெற்ற பக்திப்பாடல்களின் முதன்மைப் பொருள் சிவபெருமான். சிவனது பெருமை கூறும் பக்திப்பனுவல்களில் வேறு தெய்வங்களினதும், தேவர்களினதும் புராண வரலாறுகள் பல விரவிக்காணப்படுகின்றன.

## உமையம்மை

தேவாரங்களில் உமையம்மை பற்றிய பல புராணக்கதைகளைக் காணமுடிகின்றது. மலையரசனின் மகளாகப் பிறந்தவள், மீனவராசனின் மகள், தக்கனின் மகள், திருமாலின் தங்கை, விநாயகனின் தாய், இறைவனுடன் கூடியிருப்பவள் முதலிய கதைகளை தேவார முதலிகள் கையாண்டு தமது பாடல்களுக்கு வளம் சேர்த்துள்ளமை குறிப்பிடத்தக்கது. அத்துடன் இறைவனது உருவில் பாதியை அம்மை பெற்றுள்ள திறத்தினையும் காணமுடிகின்றது. சுந்தரர் தேவாரத்தில்

"முகிழ்மென் முலையாள் உமை பங்கா"

"வண்டார் குழலி உமை நங்கை"

"வருவார் விடைமேல் மாதோடு"

"வளைக்கை முன்கை மலை மங்கை மணாளன்"

எனவும், திருநாவுக்கரசரது தேவாரப் பதிகங்களில் இறைவன் மலையரசன் மகளான உமாதேவியுடன் கூடியிருப்பவர் என்பதனை திருவையாற்றுத் திருப்பதிகத்தில்

"மாதர்ப்பிறைக் கண்ணி யானை

மலையான் மகளொடும் பாடி"

பாடியுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும் (Ramasubramaniam, 1998a). அத்துடன் இறைவன் இறைவியின் பாகமானவர் என்பதனை,

"ஏந்திழை யாளொடும் பாடிக்"

எனும் பாடலில் குறித்துக்காட்டியுள்ள தன்மை தனித்துவமானது.

## திருமால்

தேவாரங்களில் திருமாலுக்குரிய இடம் தனித்துவமானது. திருமால் பற்றிய கதைகள் விரிவானதாகக் காணப்படுவதுடன், ஏனைய தெய்வங்களுடனும் தேவர்களுடனும் கொண்டுள்ள உறவுகள் பற்றியும் அறியக்கிடைக்கின்றது. தேவார காலச் சைவ மரபில் வைணவ சமயத்தின் சம்பிரதாயங்களை கலக்கச் செய்ய சைவ நாயன்மார்கள் திருமால் பற்றிய கதைகளை கையாண்டுள்ள விதம் கவனத்திற்குரியது. அவற்றில் திருமாலுக்கு சிவன் அருள் புரிந்த விதம், திருமாலது அவதாரச் சிறப்புக்கள், திருமால் அசுரர்களை வதம் செய்த முறைமை முதலிய அம்சங்களை தேவாரங்களில் காணமுடிகின்றது.

## திருமால் சக்கராயுதம் பெறுதல்

காத்தற் கடவுளான திருமால் தினமும் சிவனுக்கு ஆயிரம் மலர்களால் பூசை புரிவது வழக்கமாக இருந்தது. ஒரு நாள் பூசை புரிவதற்கு ஒரு மலர் குறைய தமது கண்ணில் ஒன்றை பிடுங்கி அர்ச்சித்தார். திருமாலது பக்தியைக் கண்ட சிவன் அவருக்கு சக்கராயுதத்தை கொடுத்து அருள் புரிந்த சம்பவம் தேவரங்களில் பயின்று வருகின்றது. சுந்தரமூர்த்தி நாயனார்

"திகழும் மாலவன் ஆயிரம் மலரால்"

"அடல் ஆழியன்று அரிதான் வேண்ட"

"பண்ணற்கு அரியதொரு படையாளி தனைப்படைத்தும்

கண்ணற்கு அருள் புரிந்தான்"

என்றும்,

திருநாவுக்கரசு நாயனார் தமது தேவாரங்களில்

"வைகுந்தற்கு ஆழி வைத்தார்"

"கொன்று போர் ஆழியம்மால்"

என்றும் பாடியுள்ளமை இவண் நோக்கத்தக்கது (Ramasubramaniam, 1998a). திருநாவுக்கரசர் தேவாரத்தில் இன்னுமோர் இடத்தில் திருமால் வக்கராசுரன் என்பவனை வதம் செய்யும் பொருட்டு தமது கண்மலரால் பூசை செய்து சக்கராயுதத்தைப் பெற்றார் எனப்பாடுகின்றார்.

"வக்கரன் உயிரைவவ்வக் கண்மலர் கொண்டு

போற்றச் சக்கரம் கொடுப்பார் போலும்................" (அப்.தே 4:56:543)

## திருமால் மூவடியால் உலகளத்தல்

மாபலிச் சக்கரவர்த்தியிடம் மூன்றடி நிலம் வேண்ட அவரும் அதற்கு இணங்க திருமால் தமது மூவடியால் அனைத்தையும் அளந்தெடுத்த கதையினை தேவாரங்களில் காணமுடிகின்றது. திருஞான சம்பந்தர் தேவாரத்தில்

"அகலிடை நீர் ஏற்றானும்........" (சம்.தே.1:71:711) என்றும்

திருநாவுக்கரசர் திருமால் மூவடியால் உலகளந்த கதையினை

"மண்ணினைத் தாவ நீணட

மாலினுக்கு அருளும் வைத்தார்....." (அப்.தே4:30:295)என்றும்

பாடியுள்ளமை குறிப்பிடத்தக்கது (Ramasubramaniam, 1998a).

## திருமால் அசுரர்களை வதம் செய்தல்

தேவார முதலிகளது பக்திப் பாடல்களில் திருமால் தேவர்களைக் காக்கும் பொருட்டு பல அசுரர்களை வதம் செய்த புராணக்கதைகளை காணமுடிகின்றது. இரணிய வதம், சலந்திரன் வதம், வக்கராசுரன் வதம், இராவணன் வதம் முதலியன தேவாரங்களில் குறித்துக்காட்டப்பட்டுள்ளன. பக்த பிரகலாதனைக் காக்கும் பொருட்டு இரணியனை திருமால் வதம் செய்தமையினை திருநாவுக்கரசர்

"இரணியன் ஆகம் தீண்டவன்"

எனப்பாடுகின்றார் (Ramasubramaniam, 1998a). திருஞானசம்பந்தர் தமது தேவாரத்தில்

"வராக உருவா

தராயனை விராயெரி பராய் மிகு" (அப்.தே)

இரணிய வதத்தைப்பாடுகின்றார் (Ramasubramaniam, 1998b). சலந்திரனது உடலை இரண்டாகப்பிளந்த கதையினை சுந்தரர் தமது தேவாரத்தில்

"சலந்தரன் ஆகம் இரு

பிளவாக்கி சக்கரமுன்." (சுந்..தே 7:70:712)

எனப்பாடுகின்றார். திருஞான சம்பந்தர்

"உறுசலதரனது

வரையன தலை விசை யொடு வரு திகிரியை....."(சம்.தே 1:20: 207)

எனப்பாடுகின்றார் (Ramasubramaniam, 1998b). வக்கராசுரனை திருமால் வதம் செய்த திறத்தினை நாவுக்கரசர் தமது தேவாரத்தில்

"வக்கரன் உயிரைவவ்வக் கண்மலர் கொண்டு….."(அப்.தே 4:56:543)

எனப்பாடுகின்றமை ஈண்டு நோக்கத்தக்கதாகும். திருமாலது அவதாரமாகிய இராமபிரான் இராவணனை தமது சக்கரப்படையால் கொன்றொழித்தமையினை

"கொன்று போர் ஆழியம்மால்……."(அப்.தே 4:61:.591)

என நாவுக்கரசர் பாடுகின்றார் (Ramasubramaniam, 1998b).

## திருமாலது அவதாரங்கள்

காத்தற் கடவுளாகிய திருமால் நல்லவர்களைக் காக்கும் பொருட்டும் தீயவர்களை அழிக்கும் பொருட்டும் பத்து அவதாரங்களை எடுத்தார் என்பது வைணவ மரபு. இம்மரபை சைவ நாயன்மார்கள் தமது தேவாரங்களில் கையாண்டதற்குரிய பின்னணி கவனத்திற்குரியது. திருமால் பத்து அவதாரங்களை எடுத்தவர் என்பதனை திருநாவுக்கரசர்

"ஆகம்பத் தரவணையான் அயன் அறிதற்கு

அரியானை" (அப்.தே 4:7:70)

எனும் தேவாரத்தில் பாடியுள்ளமை சிறப்பானது (Ramasubramaniam, 1998a). திருமாலின் வராக அவதாரம் பற்றிய கருவை பின்னணியாகக் கொண்டு இரண்டு விதமாகக் கதை கூறப்படுகின்றது. அவற்றிலொன்று விஸ்ணு பன்றி வடிவெடுத்து மலையடிவாரத்தை தேடிச் சென்ற கதை மற்றது பூமாதேவியைத் தாங்கும் பொருட்டு பன்றி வடிவெடுத்த கதை. அப்பர் தேவாரத்தில் பன்றி வடிவம் கொண்டு பூமியைக் குடைந்து சென்ற கதையினை

" பானமர் ஏனமாகிப் பாரிடைத்திட்டமாலும்……" (அப்.தே 4:56:546)

எனப்பயின்று வந்திருக்கின்றது. அத்துடன் அவர் வாமன அவதாரம் எடுத்த கதையினையும் தமது தேவாரங்களில் பதிவாக்கியுள்ளார் (Ramasubramaniam, 1998b).

திருமால் கோவர்த்தன மலையை குடையாகப் பிடித்து மக்களைக் காத்தமை, உலகத்தை உண்டு உமிழ்ந்தமை, சிவனது உடலில் பாதி பெற்றமை, பாற்கடலில் பள்ளி கொண்டமை, கருநீல நிறம் பெற்றமை, காத்தல் தொழில் புரிந்தமை, முதலிய புராணச் சம்பவங்கள் நாயன்மார் தேவாரங்களில் காணப்படுகின்றமை கவனிக்கத்தக்கது.

## பிரம்மன்

தேவார காலத்தில் சைவத்தை காத்து நிலை நிறுத்த சிவனது பெருமைகளை குறித்துக்காட்ட வேண்டிய தேவை இருந்தது. இத்தேவைகளை நிறைவேற்றும் பொருட்டு ஏனைய தெய்வங்களது இயல்புகளையும், அவர்கள் சிவனால் ஆட்கொள்ளப்பட்டு அருள் பெற்ற திறத்தையும் மையமாகக் கொண்டு தேவார கால சைவ அடியார்கள் பல பாடல்களைப் பாடினர். அவற்றில் பிரமனது இயல்புகளும், அவருக்கு இறைவன் அருள் வழங்கிய திறமும் எடுத்தியம்பப் படுகின்றன. சுந்தரமூர்த்தி நாயனாரது தேவாரம் ஒன்றில்

"அன்று அயன் சிரம் அளந்து அதில் பரிகொண்டு………"(சுந்.தே 7:45:460)

எனும் பாடலடி வருகின்றது. அதில் பிரம்மனது ஐந்து தலைகளில் ஒன்றை சிவன் கொய்து அதில் பிச்சை ஏற்று தமது தமது திருவருளை வெளிப்படுத்தினார் எனக்கூறப்படுகின்றது. திருநாவுக்கரசர் தேவாரம் ஒன்றில் பிரம்மன் படைத்தல் தொழிலுக்குpரிய தெய்வம் என்பது வெளிப்படுத்தப்படுகின்றது.

"நாரணன் காண் நான்முகன் காண்

நால்வேதன் காண்.................." (அப்.தே 6:8:78)

திருஞானசம்பந்தரது தேவாரங்களில் பிரம்மன் பற்றிய பல கதைகள் பயின்று வந்திருப்பதனை காணமுடிகின்றது. அவரது முதலாவது தேவாரமான தோடுடைய செவியன் என்னும் தேவாரத்தில்

"ஏடுடைய மலரான் முனைநான் பணிந்து......."(சம்.தே1:1:1)

எனும் அடியில் ஒருகாலத்தில் நான்முகனது வழிபாட்டை ஏற்று அருள் செய்தவன் இறைவன் கருத்து வெளிப்பட்டு நிற்க. அவரது இன்னுமோர் பாடலில் சிவன் முப்புரங்களை எரிக்கச் சென்ற வேளையில் அவருக்கு சாரதியாக பிரம்மன் தொழிலாற்றினார் என்பதை

"வானோர் எல்லாம் ஒரு தேராய் அயன் மறைபூட்டி நின்று......" (சம்.தே.

எனும் தேவாரத்தில் காணமுடிகின்றது.

## திருமால் - பிரம்மன்

மூவர் தேவாரங்களில் திருமால், பிரம்மன் பற்றிய கதைகள் தனித்தனியே காணப்படினும் அவர்கள் இருவரும் இணைந்து கருமமாற்றுகின்ற சம்பவங்கள் பலவும் வருகின்றன. குறிப்பாக திருமால் பன்றி வடிவெடுத்து பூமியின் முடிவைத் தேடிச் செல்ல, பிரம்மன் அன்னப்பறவை வடிவெடுத்து விசும்பின் முடிவைக் காணச் சென்ற கதை பல இடங்களில் குறித்துக் காட்டப்படுகின்றன. அவற்றில் ஒரு சில குறிப்புக்கள் வருமாறு சுந்தரர் தேவாரத்தில்

"மலர் மிசை நான்முகனு மண்ணும் விண்ணும்

தாய அடிஅளந்தான்..............................." (சுந்.தே )

எனவும், சம்பந்தர் தேவாரத்தில்

"தாள் நுதல் செய்து இறை காணியமாலொடு

தண்தாமரையானும்............................."( சம்.தே1:1:9)

எனவும், அப்பர் தேவாரத்தில்

"தேடிக்கண்டு கொண்டேன் திரு

மாலொடு நான்முகனும்..........." (அப்.தே 4:9:93)

என வெளிப்படும் கருத்து கவனத்திற்குரியது. சிவன் ஒருவரே முழுமுதற் தன்மை பெறும் கடவுள் என்பதனை இப்பாடலடிகள் காட்டி நிற்கின்றன.

## திருமகள்

பழந்தமிழகத்தின் சமய வழக்கில் திருமகள் பற்றிய குறிப்புக்கள் உண்டு. அம்மரபு பல்லவர் கால சமய இலக்கியங்களிலும் காணப்படுகின்றன. குறிப்பாக சைவ நாயன்மார்கள் முதன்மையானவர்கள் எனக் கருதத்தக்க தேவார மூவரும் திருமகளைத் தமது தேவாரங்களில் குறித்துக்காட்டத் தவறவில்லை. செல்வம் நிறைந்த இடத்தை திருமகளுக்கு ஒப்புவமை காட்டுகின்ற வழக்கம் சைவ மரபிலுண்டு. திருமாலின் நாயகியாக திருமகளை காண்பிக்கின்ற திறத்தை தேவாரங்களில் காணமுடியும். சுந்தரர் தேவாரத்தில்

"திருவின்நாயகன் ஆகிய மாலுக்கு....." (சுந்.தே. 7:44:441)

எனவும், நாவுக்கரசர் தேவாரத்தில் திருமகள் தாமரை மலரில் வீற்றிருந்து அருள் வழங்குகின்ற தன்மையை

"திருவமர் தாமரை சீர்வளர்......" (அப்.தே4:97:952)

எனவும், சம்பந்தர் தமது பாடலில்

"பங்கய மங்கை விரும்பும் ஆவூர்ப்

பசுபதி ஈச்சரம் பாடு நாவே" (சம்.தே1:8:78)

எனவும்

"தண்டாமரை மலராள் உறை......" (சம்.தே 1:9:87)

எனவும் பாடியுள்ளமை ஈண்டு நோக்கத்தக்கதாகும்.

## காளி

தமிழ், சமய இலக்கியங்களில் காளி வீரத்துக்கும், வெற்றிக்கும் உரிய தெய்வமாக வருணிக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்க அம்சமாகும். தேவாரங்களிலும் இதே தோராயத்துடன் காளி பாடப்படுகின்றமை கவனத்துக்குரியது. சம்பந்தர் தேவாரத்தில்,

"வல்லைவரு காளியை வகுத்து வலி

யாளிமிரு தாரகனை நீ" (சம்.தே1:73:793)

எனும் பாடலடி வலிமையுடைய காளி தேவியினூடாக தாரகாசுரன் என்னும் அசுரன் வதம் செய்யப்பட்டமையைக் குறித்துக் காட்டுகின்றது. இத்துடன் காளி கோபம் மிக்கவள் என்பதனை நாவுக்கரசர் தேவாரத்தில்,

"பைதற் பிணக்குழைக் காளி வெல்வ...."(அப்.தே 4:100:967

எனவும். சுந்தரர் தேவாரத்தில்

"கொதியினால் வரு காளிதன் கோபம்

குறைய ஆடிய கூத்துடையானே........"(சுந்.தே 7:53:532)

எனவும் வருகின்றமை இவண் நோக்கத்தக்கதாகும் (Ramasubramaniam, 1998b).

## விநாயகர்

தேவார காலத்தில் விநாயகக் கடவுள் பற்றிய கதையாடல்கள் பல மூவர் தேவாரங்களில் காணப்படுகின்றன. சிவனது மகனாக விநாயகக் கடவுளை சுட்டுகின்ற பண்பு கவனத்திற்குரியது. அத்துடன் விக்கினங்களைத் தீர்ப்பவர் என்ற வகையில் சில தேவாரங்களில் விக்கின விநாயகன் என்றும், பூத கணங்களுககெல்லாம் தலைவர் என்ற பொருளில் கணபதி எனவும், யானை முகத்தை உடையவன் என்ற கருத்தில் கரிமுகன் எனவும் போற்றிப் பாடப்பட்டுள்ளமை இவண் நோக்கத்தக்கதாகும். திருநாவுக்கரசர் தேவாரத்தில்

"கோவாய இந்திரனுள்ளிட்டா ராகக்

குமரனும் விக்கின விநாயகன்னும்....." (அப்.தே 6:13:136)

எனவும்

"கணபதி என்னும் களிரும்......" (அப்.தே 4:2:15)

எனவும் பாடியுள்ளதுடன் திருஞானசம்பந்தர் விநாயக்கடவுளின் வீரத்தைப் போற்றிப்பாடியுள்ளமை தேவார கால அரசியல், சமய பின்புலத்தைக் காட்டுவது போல் அமைந்துள்ளது. அதாவது மது என்னும் அரசன் நாணுமாறும், வலிமை கொண்டு தீமை செய்த கயமுகாசூரன் அழியுமாறும் செய்தவர் விநாயக்கடவுள் என்று பாடுகின்றார்.

"மாணி மது நாணும் வகையே

ஏனுகரி பூணழிய ஆணியல்கொண்......" (சம்.தே.3:325:715)

## முருகன்

தேவார கால சைவ நெறியில் முருகக் கடவுளுக்கு முக்கியத்துவம் உண்டு. ஏனெனில் வீரயுகம் எனக்கருதத்தக்க பழந்தமிழகத்தில் உருவான இலக்கியங்களில் முருகன் கொற்றவையின் சிறுவனாக வருணிக்கப்படுகின்றான். தேவார கால சைவ அடியார்கள் குறிப்பாக தேவார முதலிகள் சிவசக்தி மைந்தன் என்ற பொருளில் துதி செய்து பாடியுள்ளமை குறிப்பிடத்தக்கது. அத்துடன் சரவணப் பொய்கையில் பிறந்த கதை, முருகப் பெருமான் ஆறு முகங்களும், பன்னிரு கரங்களும் உடையவர் என்ற வட நூலார் கருத்து, சூரபத்மன் நடுக்கடலில் மாமரமாகி நின்ற கதை, அவனை முருகக் கடவுள் வதம் செய்த புராண மரபு முதலிய அம்சங்கள் தேவாரங்களில் உள்வாங்கப்பட்டமை வியப்பிற்குரியதன்று.

“நங்கடம்பனைக் பெற்றவள் பங்கினள்……”(சம்பந்தர்)

“அமரர்நாதனைக் குமரனைப் பயந்த……..” (சுந்.தே 7:47:478)

“ ஏல நற்கடம்பன் தந்தை……..”(அப்.தே 4:43:425)

“சரவணத்தான் கை தொழுது சாரும்படி….” (அப்.தே ;6:6:54)

“பன்னிரண்டு கையுடைய பிள்ளை தோன்றும்….” (அப்.தே 6:18:;.182)

“காதலாற் கடற் சூர் தடிந்திட்ட

செட்டியப்பனைப் பட்டணைச் செல்வ…….” (சுந்.தே 7:45:459)

தமிழகத்தில் வழக்கிலுள்ள முருக வழிபாட்டு மரபில் குறிஞ்சி நிலத்துக்கும் அங்கு வாழ்ந்த குடிகளான குறவர்களுக்கும் தனியிடம் உண்டு. முருகன் குறிஞ்சி நிலத்துக்குரிய கடவுள், குறமகளாகிய வள்ளியை தமது துணையாக்கிக் கொண்ட வரலாறு, தமிழகத்திலுள்ள முருகத்தலங்களில் திருச்செந்தூரின் பிரதானம், முதலான தமிழ்நாட்டு முருக வழிபாட்டுடன் தொடர்பான தொன்மங்கள் தேவார முதலிகளது பாடல்களில் பயின்று வந்துள்ளமை கவனிக்கத்தகக்கது (Ramasubramaniam, 1998b).

“குறவிதோள் மணந்த செல்வக்

குமரவேள்……………………” (அப்.தே 4:60:380)

“செந்தின் மேய………………

வள்ளி மணாளர்க்குத்……….” (அப்.தே 6:22:235)

எனவும் பாடியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## சிறுதெய்வம்

தேவார கால சைவ நெறியில் சிறு தெய்வங்களுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படவில்லை என்பது தெளிவு. பழந்திழகத்தில் வழக்கிலிருந்த நீலி, சூலி, அணங்கு, பேய்மகளிர், வெறியாட்டம் முதலிய பல வழிபாட்டு அம்சங்கள் தேவார காலத்தில் வழக்கோழிந்து போயின. வழக்கொழிந்து போன வழிபாடுகளில் ஒன்றுதான் சிறு தெய்வ வழிபாடு. அப்பர் சைவ சமயத்தில் இருந்து சமண சமயத்திற்கு மாறி மீண்டும் சைவ சமயத்திற்கு மீண்ட போது தமது மறுமாற்றத்திருத்தாண்டகம் என்னும் பாடலில்

“ சென்று நாம் சிறு தெய்வம் சேரோம் அல்லோம்” (அப்பர் 521)

என்று பாடியுள்ளார். சிறு தெய்வம் என்ற சொல் தமிழக சைவ மரபில் முதன் முதலாக அப்பர் தேவாரத்தில்தான் வருகின்றது.

### இந்திரன்

மிகக் கூடுதலான பாசுரங்களால் துதிக்கப்பட்ட இருக்கு வேதகாலத் தேவர்களில் இந்திரன் முதன்மையானவர். பழந் தமிழகத்தின் ஐவகை நிலப்பகுப்பில் வயலும் வயல் சார்ந்த மருத நிலத்துக்குரிய தெய்வமாக இந்திரன் வழிபடப்பட்டான். பின்னர் சிலப்பதிகார காலத்தில் இந்திர விழா சிறப்பாக நடை பெற்றிருக்கின்றன. காலவோட்டத்தில் இந்திரன் பற்றிய கதைகள் அருகிக் காணப்படுகின்றன. அந்த வகையில் தேவாரங்களில் இந்திரன் பற்றிய ஒரு சில குறிப்புக்கள் மாத்திரமே காணப்படுகின்றன. இந்திரன் மருத நிலத்துக்குரிய கடவுள், தேவரகளுக்கெல்லாம் தலைவர் இந்திரன் என்பதும், இந்திரன் முதலான தேவர்கள் பாற்கடலைக் கடைந்த புராண வரலாறு முதலியன மூவர் தமிழில் பயின்று வந்துள்ளமை அவதானிக்கத் தக்கது.

“மருத வானவர் வைகும்

வைகும் இடம்...........” (சுந்.தே 7:1:2)

“இந்திரனாதி வானவர் சித்தர் எடுத்தேத்தும்....” (அப்.தே 4:21: 214)

“மறிகடல் எழுநெய்யாக

இந்திரன் வேள்வித் தீயில்.....” (அப்.தே 4:28:282;)

என தேவார முதலிகள் பாடீயள்ளனர்.

### வருணன்

இந்திரனைப் போலவே இந்தியாவின் வடதேசத்திலும், பழந் தமிழகத்திலும் சிறப்புற்று விளங்கிய வருண தேவன் தேவாரங்களில் ஓரிரு இடங்களில் இடம் படித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

“இயக்கர் கின்னரர் யமனோடு வருணன்....”

என சுந்தரரும், நிலவுலகம் முழுவதும் அதிரவும் மலையிடைத் திரியும் யானை மீதேறி என் எதிரே அலைகின்ற கடலுக்கு அரசன் வருணன் என திருநாவுக்கரசரும் பாடிகின்றனர்.

“அலைகடலால் அரையன்

அல் கொண்டு முன் வந்திறைஞ்ச....” (அப்பர் 4:12:128)

இப்பாடலில் வருணன் அரையன் என்று குறித்துரைக்கப்படுகின்றார்.

### அக்கினி

மூன்று சுடர்கள் என்ற வகையில் தேவாரங்களில் அக்கினி தவர்க்க முடியாத தேவராக கருதப்படுகின்றார். சுந்தரர் தேவாரத்தில்

“இயங்கு தீ வளி ஞாயிறு திங்கள் .....” (சுந்தரர்)

என்பதில் தீ குறித்து நிற்பது அக்கினியையே ஆகும். முப்புரங்களை எரிப்பதற்கு அக்கினி தேவனும் ஒரு கணையாகப் பயன்படுத்தப்பட்டார் என்பது அப்பர் தேவாரம் ஒன்றில் வருகின்றது. அது பின்வருமாறு அமைகின்றது.

“மூன்று கொலம் புரம் எய்தன தாமே..” (அப்.தே 4:18:179)

என்பதாகும். திருஞான சம்பந்தர் தேவாரம் ஒன்றில் அக்கினி தேவனுடைய இரு கரங்களையும் சிவன் அறுத்து வீசிய புராண சம்பவம் கூறப்படுகின்றது.

“அழல் உருவனகரம் அறமுனி

வு செய்தவன்...................” (சம்.தே:3:27:;208)

என இப்பாடல் முடிகின்றது.

## நவக்கிரகங்கள்

இந்து அறிவியலில் வானியல் பற்றிய கருத்து பிரசித்தமானது. வானியலில் நவக்கிரகங்கள் பற்றிய எண்ணக்கரு தவர்க்கமுடியாதவையாகின்றன. ஒருவருடைய வாழ்வியலில் கிரகங்கள் ஏற்படுத்துகின்ற தாக்கம் பற்றிய தொன்மம் தமிழர் வாழ்வியலிலும் இறுகப்பிணைந்துள்ளது. சைவ நாயன்மார்களின் குறிப்பாக தேவார முதலிகளது பாடல்களில் நவக்கிரகங்கள் ஏற்படுத்துகின்ற தாக்கம் பற்றிய ஐதீகத்தினை காணமுடிகின்றது. திருஞான சம்பந்தர் பாண்டிய நாட்டுக்கு புறப்பட ஆயத்தமாகையில் திருநாவுக்கரசர் அன்றைய கிரக பலன் பற்றிக் கூறிய கருத்து ஈண்டு நோக்கத்தக்கதாகும். அதற்கு சம்பந்தப் பெருமான் இறுக்கும் பதிலும் சிறப்பானது.

“வேயுறு தோளிபங்கன் விடமுண்ட கண்டன்

மிகநல்ல வீணை தடவி ....................”

எனும் தேவாரத்தில் சூரியன், சந்திரன், செவ்வாய், புதன், வியாழன், சுக்கிரன்,சனி, இராகு, கேது முதலிய கிரகங்கள் பற்றிய கருத்து வருகின்றமை குறித்துக் காட்டப்படவேண்டியது.

திருநாவுக்கரசரது தேவாரத்தில் சூரியன், சந்திரன், புதன் முதலிய கிரகங்கள் பற்றிய கதையினை

“ஆதித்தன் அங்கி சோமன்

அயனொடு மால் புதனும்....(அப்.தே 4:36:360)

எனவும், சுந்தரர் மக நட்சத்திரத்துக்கும் சனிக்கிரகத்திற்கும் உள்ள தொடர்பினை

“மகத்திற் புக்கதோர் சனி எனக்கு ஆனாய்...” (சுந்.தே 7:42:420)

என்னும் தேவாரத்தில் குறித்துக்காட்டுகின்றார். திருஞான சம்பந்தரும் குரு பகவானாகிய வியாழன் பற்றியும், இராகு, கேது ஆகிய கிரகங்களின் உருவாக்கம் பற்றியும் பாடியுள்ளமை அக்கால சமுதாய வழமைகளில் கிரகங்களின் பலன் இன்றியமையாதனவாக விளங்கியிருக்கின்றது.

“வெங்குருவிளங்கி உமை பங்கரசர.....” ( சம்.தே 3:325:;717)

என்னும் பாடலில் வியாழன் என்னும் கிரகத்துக்குரிய ஏற்றம் கொடுக்கப்பட்டுள்ளமையும்

“பரவ இரு

கிரகம் அமர் சிரபுரமதே............” (சம்.தே 3:325:720)

என்னும் தேவாரத்தில் பாம்பின் சிரத்தை அறுத்து திருமால் வீச அச்சிரமானது அரனைச் பணிந்து இரண்டு கிரகங்களாக(இராகு, கேது) மாறிய கதையினைக் கூறுகின்றார்.

தேவார முதலிகள் தமது தேவாரங்களில் நவக்கிரகங்களில் ஞாயிற்றுக் கிரகமாகிய சூரியனுக்கு முதன்மையளிக்கப்பட்டுள்ள சந்தர்ப்பங்கள் பல காணப்படுகின்றமை கவனத்திற்குரியது.

## அட்டதிக்கு பாலகர்

எந்த ஒரு காரியத்தையும் தொடங்கு முன்னர் காரணம் கருதி அக்காரியத்திற்கு காவல் காப்பது சைவ மரபு. அதன் பொருட்டு சைவ நாயன்மார்களும் இம்மரபினைப் பேணி தமது தேவாரங்களில் காவல் தேவதைகள் எனக்கருதத்தக்க அட்டதிக்கு பாலகர்களை துதி செய்து பாடியமை குறிப்பிடத்தக்கது. ஐம்பூதங்கள், முச்சுடர்கள், யமன், வருணன் முதலிய தேவதைகள் இப்பாடல்களில் இடம்பிடித்துள்ளன. திருஞானசம்பந்தர் தமது தேவாரத்தில்

“மண்ணும் புனல் உயிரும் வரு

காற்றும் சுடர் மூன்றும் .........” (சம்பந்தர்1:11:111)

எனவும் திருநாவுக்கரசர் தமது தேவாரப்பதிகத்தில்

“ஞாயிறாய நமனும் ஆகி

வருணனாய்ச் சோமனாகித்

தீய நா நிருதி வாயுத்

திப்பிய சாந்தனாகி......" (அப்.தே 4:33:319)

எனவும் அவர் இன்னுமொரு தேவாரத்தில்

"இரவியும் மதியும் விண்ணும்

இருநிலம் புனலும் காற்றும்

உரகமார பவனம் எட்டும்..." (அப்.தே 4:61:615 )

எனப்பாடியுள்ளமை தமிழக சைவ மரபில் அட்டதிக்கு பாலகர்களுக்கு இருந்த முக்கியத்துவத்தினை காட்டி நிற்கின்றது.

## முடிவுரை

தமிழ் இலக்கியப்பரப்பில் பக்தி இலக்கியங்களாகிய தேவாரங்கள் முக்கிய பதிவாகின்றன. இறையருள் பெற்ற அருளாளர்களால் ஓதப்பட்ட இத்தேவாரப் பாடல்கள் சிவப் பரம்பொருளை போற்றத்தக்க வகையில் அமைந்துள்ளன. சிவனது பெருமை பகர்வதற்கு சிவன் ஏனைய தெய்வங்களாலும், தேவர்களாலும் துதிக்கப் பெற்றமையை வெளிப்படுத்துவதற்கே தேவாரங்களில் சிவன் அல்லாத தெய்வங்களையும் தேவர்களையும் பாட வேண்டிய தேவை இருந்தமையை அறியக் கூடியதாக உள்ளது. சிவனது பெருமை கூற பிரம்மாவும், விஸ்ணுவும் அடிமுடி தேடி ஈற்றில் தோல்வி கண்டு இறைவனை சரணடைந்த கதை, தேவர்களும், அசுரர்களும் பாற்கடல் கடைந்த போது உண்டான ஆலகால விடத்தை இறைவன் உண்டு அவர்களை காத்தருளியமை, முப்புரங்களைத் தகனம் செய்தமை, அர்த்தநாரி, அரிகர வடிவங்களைத் தாங்கியமை, சூரனைத்தண்டித்த முருகப் பெருமானுக்கு அருள்பாலித்தமை, கயமுகாசுரனை வதைத்த விக்கின விநாயகனால் வழிபடப்பட்டமை முதலிய சிறப்பம்சங்களை மூவர் தமிழில் காணமுடியும்.

## References


Ramasubramaniam, V.T. (1998) Thirugnana Sambandar Swamigal Aruluiseitha Tevaram, Varthaman Pathippagam, Chennai, India

Ramasubramaniam, V.T. (1998a) Thirunavukarasu Swamigal Aruluiseitha Tevaram, Varthaman Pathippagam, Chennai, India

Vellaivaranan, V. (1962) Panniru Thirumurai, Annamalai University, Tamil Nadu, India

Velupillai, A. (1999) Tamil Ilakiyathil Kalamum Karuthum, Paari Nilayam, Chennai, India



## Funding

This study was not funded by any grant.


## Conflict of interest

The Authors have no conflict of interest to declare that they are relevant to the content of this article.


## About the License

© The Authors 2024. The text of this article is open access and licensed under a Creative Commons Attribution 4.0 International License



### Cite this Article

V. Gunapalasingam & R. Suresh, Moral God's and Goddesses in Devaram other than Shiva, Indian Journal of Tamil, 5(1), (2024) 1-11. https://doi.org/10.54392/ijot2341